# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100,அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை-600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 222/2015

ஆணை எண்: 094 /2016

நாள் : 20/ 05 /2016

திரு,ச,தங்கராஜ், வனச்சரக அலுவலர் (ஓய்வு),
2/311, C/o. கோமதி, இந்திரா நகர்,
திரிசூலம், சென்னை – 600 043. மனுதாரர்

1. திரு.G. திருமுருகன்,
ஜீவானா நிறுவனம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர்
3. சென்னை மாநகராட்சி ஆணையர் எதிர் மனுதாரர்

திரு.ச.தங்கராஜ். வனச்சரக அலுவலர் (ஓய்வு), என்பவரது 30.09.2015 நாளிட்ட முறையீட்டு மனு தொடர்பாக ஆவணங்கள், வாக்குமூலங்கள் மற்றும் விசாரணைகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு இம்முறைமன்ற நடுவத்தால் கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது

## ஆணை

திரு.ச.தங்கராஜ், வனச்சரக அலுவலர் (ஓய்வு) என்ற மனுதாரர் தனது 30.09.2015 நாளிட்ட மனுவில் உள்ளாட்சி அமைப்புகளில் நவீன தகன மேடைக்கான உபகரணங்கள் அமைத்ததிலும் , பராமரிப்பிலும் 2010 –2015 ஆண்டுகளில் ஏற்கனவே வாங்கிய போலி நவீன தொழில்நுட்ப அறிக்கையின் படி பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும் அரசு பணம் பெருவாரியாக கையாடல் செய்யப்பட்டு வருகிறதெனவும் இது குறித்தான புகார்களையும் அனுப்பி வைத்துள்ளார்.

2) மேற்படி முறையீட்டு மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (புகார்களை தாக்கல் செய்யும் நடைமுறை, விசாரணை மற்றும் தீர்வு) விதிகள், 2015–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிமுறையில் உரிய படிவத்திலும், (படிவம் –1) விதி 6–ன் படி உரிய மதிப்பிலான (ரூ.10/–) நீதிமன்ற கட்டண முத்திரை ஒட்டாமலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மனுதாரர் அளித்துள்ள புகாரின் வீரியத்தினைக் கருதி மேற்படி மனு நிராகரிக்கப்படாமல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்படலாமென இம்முறை மன்ற நடுவத்தால் கருதப்பட்டது.

3) மேற்படி மனுவில் நவீன தகன மேடை தொடர்பான பணிகளுக்கென முறைகேடாக சுமார் 300 கோடி விரையமாகிக் கொண்டும் அரசு பணம் பெருவாரியாக கையாடல் செய்யப்பட்டுக் கொண்டு வருகிறதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சட்டரீதியான துரித நடவடிக்கை எடுக்காவிடில் சுமார் 2022 ஆம் ஆண்டு வரை 15 ஆண்டுகளுக்கு அண்ணா பல்கலைக்கழகம் / IES பெயரில் போலியாக தயாரிக்கப்பட்ட நவீன தொழில்நுட்ப திட்ட அறிக்கையை பயன்படுத்தி தொடர் முறைகேடுகள் மூலம் கோடிக் கணக்கில் அரசு பணம் கையாடல் நடந்து கொண்டே இருக்குமென்வும் கூறப்பட்டுள்ளது. மேலும் இப்பொருள் குறித்து கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் / புகார்கள் எழுப்பப்பட்டுள்ளன.

I) 2007- 2008–ம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக்கழகம் / IES பெயரில் Prepared by அண்ணா பல்கலைக்கழகம் என 100 சதவீதம் போலியாக தயாரித்த நவீன தொழில் நுட்ப திட்ட அறிக்கையை அரசிடம் கொடுத்து ஜீவாலா நிறுவன இயக்குநர் திரு.G.திருமுருகன் முறைகேடாக ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளது.

ii) உரிய வழிமுறை இல்லாமல் தன்னிச்சையாகவும், நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட மூன்று மடங்கு கூடுதல் தொகையில் மதிப்பீடுகள் தயாரிக்கவும், போலியான பட்டியல் தயாரிக்கவும், தரமற்ற உபகரணங்கள் சப்ளை செய்து, பழுதடைந்தால் பராமரிப்பு செலவு என அரசு பணத்தை கையாடல் செய்வதாகவும் மேற்படி நிறுவனம் மீது புகார்.

iii) இந்திய தர நிர்ணய அமைவனத்தின் ‘Indian Standard design and Tech Spec. IS’ முத்திரை தவறாக பயன்படுத்தி 2015 வரை மோசடி செய்தது

iv) தரம் குறைந்த உபகரணங்கள் விரைவில் பழுதடைந்து வருவதால் மக்களுக்கு இறந்தவர்களின் போலி அஸ்தியை முறைகேடாக தொடர்ந்து கொடுத்து வருவது.

3) மேற்படி குற்றச்சாட்டுகள் குறித்து சட்டரீதியான நடவடிக்கை எடுத்தும் முறைகேடுகளை உடன் தடுத்து நிறுத்தவும் தொடர்புடைய நபர்களிடமிருந்து அரசு இழந்த நிதியை வசூலிக்க உத்தரவிடவும் மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4) உள்ளாட்சி அமைப்புகளில் பல்வேறு இடங்களில் எரிவாயு தகனமேடை அமைக்கும் திட்டத்திற்கு நவீன தொழில்நுட்ப உதவியை அண்ணா பல்கலைக்கழகம் / IES மூலம் சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநகரத்திற்கு வழங்கவும், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன எனவும் அதன்படி (DPR) திட்ட அறிக்கைகள் தயாரிக்கவும், கலந்தாலோசகர் பணிக்காகவும் திட்ட செலவு இதர செலவுகளுடன் சுமார் ரூ.20 லட்சம் வரை 20.06.2012 வரை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறு இணைந்து செயல்படவில்லை எனவும் திட்ட அறிக்கை பெற்றமைக்கான கடிதங்கள் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளிலும் எந்த ஆதாரமும் இல்லையென மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது. முறைகேடான போலி திட்ட அறிக்கை மூலம் முறைகேடாக செலவு செய்த சுமார் ரூ.20 லட்சத்தை வட்டியுடன் வசூல் செய்யவும், முறைகேட்டிற்கு உடந்தையானவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும் கோரப்பட்டுள்ளது.

5) இந்திய தர நிர்ணய அமைவனத்தின் IS முத்திரை தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளதெனவும் தரமற்ற உபகரணங்கள் சப்ளை செய்யப்பட்டுள்ளதெனவும்

குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது. ஒப்பந்த விதிகளை மீறி சில உள்ளாட்சிகளில் காலம் கடந்தும் முறைகேடாகவும் மேற்படி நிறுவனத்தால் பணி முடிக்கப்பட்டுள்ளதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

6) நகராட்சி நிர்வாக ஆணையரக கண்காணிப்பு பொறியாளர் போலியான திட்ட அறிக்கையில் கண்டுள்ளவாறு மொத்தம் 31.85 லட்சத்திற்கான போலியான மதிப்பீட்டை அனைத்து உள்ளாட்சிகளுக்கும் அனுப்பி உள்ளாரெனவும் அதனடிப்படையில் ஸ்ரீவாலா நிறுவனம் பேரூராட்சிகளில் முறைகேடாக ஒப்பந்தம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகத்தின் பேரில் போலியான திட்ட அறிக்கைகள் தயாரித்து முறைகேடாக பணிகளை மேற்படி நிறுவன இயக்குநர் செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

7) சென்னை மாநகராட்சியில் திட்ட அறிக்கைகள் பெறப்பட்டமைக்கான எந்த ஆதாரங்களும் இல்லையென்பதால் போலியான அறிக்கைகள் எனக் கருத வேண்டியுள்ளதெனவும் நகராட்சி நிர்வாக ஆணையரக 31.03.2011 கடிதப்படி திட்ட அறிக்கைகள் 27.07.2011 மற்றும் 04.02.2012-ல் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட நிலையில் நகராட்சிகளுக்கான திட்ட அறிக்கைகள் அனைத்தும் Prepared by அண்ணா பல்கலைக்கழகம்/ IES / மார்ச் 2007 என உள்ளதாகவும் , நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் திட்ட அறிக்கைகள் பெறப்பட்டமைக்கான ஆதாரங்களின்மையால் அனைத்து திட்ட அறிக்கைகளும் போலியானவை என கருத வேண்டியுள்ளதாகவும் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. திட்ட செலவினம் (Project Cost) வழங்குவதற்கு மட்டுமே மேற்படி அலுவலகங்களில் ஆதாரமுள்ளதாகவும் திட்ட அறிக்கைகள் பெற்றமைக்கான ஆதாரம் இல்லை என்பதால் அவை போலியானவை என்ற குற்றச்சாட்டினை மனுதாரர் எழுப்பியுள்ளார்.

8) இப்பொருள் தொடர்பாக மனுதாரர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு, சென்னை மாநகராட்சி ஆணையர், நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் காவல் துறை ஆகிய அலுவலகங்களுக்கு மனுக்கள் அனுப்பியுள்ளதாகவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், இம்முறை மன்ற நடவத்திற்கு 04.05.2015–ல் மனு செய்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால், மனுதாரரது மேற்படி கடிதம் தொடர்பாக தக்க பதில் ந.க.எண்.அ1/0040/15 நாள்07.05.2015–ன் மூலம் இம்முறை மன்ற நடுவத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலே பத்தி 2–ல் குறிப்பிட்டுள்ள விதிகள் அரசாணை எண்.143 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) நாள். 28.09.2015–ன் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், 30.09.2015 தேதியிட்ட இம்முறையீட்டு மனுவும் பத்தி 2–ல் குறிப்பிட்டவாறு உரிய வழிமுறையில் சமர்ப்பிக்கப்படவில்லை. இருப்பினும் மனுதாரரது மனுக்கள் 30.09.2015 மற்றும் 12.01.2016 ஆகியவை தொடர்பாகவும் ந.க.எண்.31/த.ந.அ.உ.ச/16 நாள். 22.03.2016–ன் மூலம் மனுதாரருக்கு தக்க பதில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

9) மேலும், 2007–2008–ல் வழங்கப்பட்ட அண்ணா பல்கலைக்கழகம் IES பெயரில் தயாரிக்கப்பட்ட போலி அறிக்கையின்படி முறைகேடுகள் நடந்து வருவதால் ஆதாரங்கள் 5 ஆண்டுகளுக்கு மேலானவை என்ற அடிப்படையில் விசாரணை செய்ய இயலாது என்பது ஏற்கத்தக்கதல்ல என மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். மனுதாரரின் இக்கூற்று ஏற்புடையதல்ல. சட்டபூர்வமானதும் 1908 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் படி உரிமை வழக்கு ஒன்றினை விசாரணை செய்யும் உரிமையியல் நீதி மன்றமொன்றின் அதிகாரங்கள் பெற்றுள்ள இம்முறைமன்ற நடுவத்தினால் எடுக்கப்பட வேண்டிய முடிவினை முன்னதாக ஒருவர் தன்னிச்சையாக தானே முடிவெடுத்து வலியுறுத்துவது முரண்பாடானதாகும்.

10) அரசுப் பணிகளில் மதுரை ஜீவாலா நிறுவனம் முறைகேடாக ஒப்பந்தங்கள் செய்து கூட்டு சதித்திட்டத்தில் அரசை மோசடி செய்துள்ளதால் நடவடிக்கை எடுத்து கூடுதலான அபராதத் தொகையினை வசூலிக்குமாறும் மனுதாரர் கேட்டுக்

கொண்டுள்ளார். 2007–2008–ல் மேற்படி நிறுவனம் முறைகேடாக ஒப்பந்தம் பெற்றும், பணிகளை முடிக்காமல் ஒப்பந்த விதிகளை மீறி தொழில் நுட்ப ரீதியாக அது தொடர்பான உபகரணங்கள் 2010–2015 முடிய உள்ள காலக்கட்டத்தில் சுமார் 7 ஆண்டு கால தாமதமாக சப்ளை செய்து முறைகேடான பணிகளை செய்து வருவதால் சட்டரீதியாக விசாரணை செய்து அரசு இழந்த பல கோடி ரூபாய் பணத்தை மீட்கவும் முறைகேடுகள் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார்.

11) இப்பொருள் குறித்து இம்முறை மன்ற நடுவத்தால் 18.02.2016 அன்று மனுதாரரிடம் விசாரித்தபோது மனுதாரரால் அளிக்கப்பட்ட வாக்கு மூலத்தில் சென்னை மாநகராட்சி திட்ட அறிக்கைகள் தொடர்பான கடித நகல்களை ஒரு வாரத்தில் சமர்ப்பிப்பதாகவும், 2007–2014 வரை தமிழ்நாடு முழுவதும் சுமார் 200 இடங்களில் பராமரிப்பு பணி உட்பட சுமார் 300 கோடி செலவிடப்பட்டுள்ளதாகவும் இத்திட்டத்திற்கான மாநில அரசின் செலவு சதவீதம் குறித்த விவரங்களை அடுத்த விசாரணையில் சமர்ப்பிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதனிடையே பிறிதொரு மனு ஒன்றில் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை விவரங்கள் கோரி மேல்முறையீட்டு மனு ஒன்றினையும் தனியே இம்முறை மன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்துள்ளார். முறையீட்டு மனுவில் மனுதாரரால் எழுப்பப்பட்டுள்ள பல்வேறு பொதுவான மற்றும் பல துறைகள் சம்பந்தப்பட்ட காலம் கடந்த புகார்களை இம்முறை மன்றம் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஒப்பாக, உரிய வாய்ப்புகள் அளிக்காமல் உடனடியாக தீர்வு கண்டு ஆணை பிறப்பிக்க வேண்டுமென மனுதாரர் நிர்பந்திக்க முயல்வது ஏற்புடையதல்ல.

12) புகாரில் குறிப்பிட்டுள்ள திட்டப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி பட்டியல் (Tender Schedule) போலியானவை எனவும், ஒப்பந்தம் முறைகேடானது எனவும், திட்ட மதிப்பீடுகள் ஒப்பளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பட்டியல் முறைகேடானவை எனவும் அளவீட்டுப் புத்தகம் (Measurement Books) பதிவுகள், வரைபடங்கள் முரண்பாடானவை எனவும் தொழில் நுட்ப ரீதியான அனைத்து ஆவணங்களில் நிலை குறித்தும் பொதுவான குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டுள்ளன. உள்ளாட்சி நிதி தணிக்கை குழு தணிக்கை குறித்தும் புகார் எழுப்பப்பட்டுள்ளது.

13) வாக்குமூலத்தில், சில குறிப்புகள் தன்னிடம் வீட்டிலுள்ள ஆவணங்களின் அடிப்படையில் திருத்தம் செய்ய வேண்டி இருந்தால் அடுத்த விசாரணையின் பொழுது திருத்திக் கொள்ள அனுமதிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

14) 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவச் சட்டப் பிரிவு 10 (3) (c) ல் "முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து 5 ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் விசாரணை செய்தல் கூடாது'' என குறிப்பிடப்பட்டுள்ளது. மனுவில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பான நிகழ்வுகள் 9/2006 முதலானவையாகும். மனுதாரரே 2007 –2015 வரை நடைபெறுபவை என பொதுவாகவே குறிப்பிட்டுள்ளார். இவற்றில் ஆண்டு வாரியான, பணிகள் வாரியான, உள்ளாட்சி வாரியான விவரங்கள் இல்லை. மேலும் மனுதாரரால் குறிப்பிட்டுள்ள புகாரில் சென்னை மாநகராட்சி மற்றும் அனைத்து உள்ளாட்சிகளுக்குமென பொருள் பொதுவானதாகவே உள்ளது. உள்ளாட்சி வாரியான, ஆண்டு வாரியான பணிகளின் எண்ணிக்கை, இடங்கள், மதிப்பீடு செலவின தொகை கூடுதலாக செலவிடப்பட்ட உள்ளாட்சி நிதி போன்ற குறிப்பான விவரங்கள் இல்லை. ஒப்பந்தப்புள்ளி பட்டியல்கள், அளவீட்டுப் புத்தகங்கள், மதிப்பீடுகள் போன்ற அடிப்படை திட்ட ஆவணங்களே முறைகேடானவை / முரண்பாடானவை என்ற பொதுவான குற்றச் சாட்டும் எழுப்பப்பட்டுள்ளது.

15) புகாரில் குறிப்பிட்டுள்ள நிறுவனமான ஜீவாலா நிறுவனத்தைக் குறிப்பிடுகையில் நிறுவன இயக்குநர் திரு.G.திருமுருகன் என்பவரே முறைகேடுகளுக்கு பொறுப்பானவர் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்திய கம்பெனிகளின் சட்டப்படி இயக்குநரோ அல்லது அதன் பிரதிநிதிகளோ முறைகேடு செய்யும் பட்சத்தில் அந்நிறுவனமே பொறுப்பேற்க நேரிடும். இந்நிலையில், மனுதாரரது தரப்பிலாவரேனும் மேற்படி நிறுவனம் அல்லது பிரதிநிதியுடன் நேரடித் தொடர்பில் இருந்து எவ்வகையிலேனும் பாதிப்படைந்துள்ளனரா என்பது குறித்து விவரங்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், 24.02.2016 அன்று

மனுதாரர் இம்முறை மன்ற நடுவத்தின் விசாரணைக்கு நேரில் ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் தான் மேற்கண்ட நிறுவனத்தின் சப் காண்ட்ராக்டர் (Sub-Contractor) எனக் குறிப்பிட்டுள்ளார். துணை ஒப்பந்தம் வழங்கிடவோ அல்லது பெற்றிடவோ ஒப்பந்த விதிகளில் வழிவகை செய்யப்படாத நிலையில் இதனை சட்டத்திற்கு முரணான செயல்பாடாகவே கருத வேண்டியுள்ளது.

16) அனைத்து திட்டப் பணி விவரங்களையும் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர் கோரியுள்ளார். மேலும், 24.02.2016 நாளிட்ட வாக்குமூலத்தில் அமலாக்கப்பட்ட அனைத்து திட்ட இடம், பராமரிப்பு பணிகள் உட்பட அனைத்திற்கும் உரிய வழி முறையில் மதிப்பீடுகள் மற்றும் டெண்டர் பட்டியல்களை அன்றைய தேதியில் உண்மையான மதிப்பீடு தயார் செய்து அதன் அறிக்கையை தொடர்புடைய அலுவலகங்களில் பெற்று அதன்படி விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

17) மனுதாரரது கோரிக்கைகளில் தொடர்புடைய கீழ்க்கண்டுள்ள இனங்கள் குறித்து உரிய ஆவணங்களை பரிசீலித்தல் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களது வாக்குமூலங்களைப் பெறுதல் அவசியமென இம்முறை மன்ற நடுவம் முடிவு செய்தது.

(i) விரிவான திட்ட அறிக்கை (DPR – Detailed Project Report) தயாரிக்கவும், கலந்தாலோசகர் பணிக்காகவும் திட்ட செலவு இதர செலவு உட்பட சுமார் ரூ.20 லட்சம் வரை 20.06.2012 முடிய அண்ணா பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்படி கலந்தாலோசிக்கவும் இணைத்து செயல்படவும் இல்லை எனவும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை மாநகராட்சியிலும் திட்ட அறிக்கை பெற்றுக் கொண்டமைக்கான கடிதங்கள் மற்றும் பதிவேடுகளிலும்

எந்த ஆதாரமும் இல்லை எனவும் முறைகேடான போலி திட்ட அறிக்கையை வைத்துக் கொண்டு 2015 ஆண்டு நாளது தேதிவரை பயன்படுத்தி அரசு பணம் கையாடல் செய்யப்பட்டு வருகின்றதெனவும் முறைகேடாக செலவு செய்த தொகை ரூ.20 லட்சத்தை சட்டப்படி வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கவும் முறைகேட்டிற்கு உடந்தையானவர்கள் மீதும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும் கோரப்பட்டது.

(ii) மனுதாரருக்கு சம்பந்தப்பட்ட துறை அலுவலகங்களால் பதில்கள் அனுப்பப்பட்ட விவரங்கள்

(iii) மனுதாரர் மற்றும் புகார்தாரர் / நிறுவனத்திற்குமான தொடர்பு.

மேற்படி இனங்கள் குறித்து முன் கோப்புகள் / ஆவணங்கள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டன. அதனடிப்படையில் கீழ்க்கண்டுள்ள விவரங்கள் கண்டறியப்பட்டன.

- விரிவான திட்ட அறிக்கைகள் (DPR) குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை மாநகராட்சி கடித விவரங்கள் ஆகியவை குறித்தும் அண்ணா பல்கலைக்கழகம் கலந்தாலோசனை பணி மேற்கொண்டது (Consultancy Agreement) குறித்தும், வழங்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கைகள் குறித்தும் அண்ணா பல்கலைக் கழகத்தால் தனது கடித எண்.821/பொ.த.அ/734 /PIO/AU-CH–2011 நாள்: 08.03.2011 மற்றும் அ.ப.செ/15 நாள் 12.11.2015 மூலம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் மனுதாரருக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி, திட்ட மதிப்பீடு அண்ணா பல்கலைக்கழகத்திலிருந்து

பெறப்பட்டது என்பது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையரக கடிதத்தின் (ந.க.எண்.5311/தி2/2011–2 நாள். 05.04.2014) மூலமும் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்ணா பல்கலைக் கழகத்தின் கடித எண்.821/பொ.த.அ / அ.ப.ச/ 2015 நாள்.12.11.2015 இணைப்பில் வரிசை எண்.5–ல் பிப்ரவரி 2008–ல் DPR சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டது குறித்தும் வரிசை எண்.9 (b) ல் 2007–ல் DPR நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு வழங்கியது குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் மேற்படி கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கீழ்க்கண்ட வாசகங்களைக் குறிப்பிட்டு DPR முறைகேடானவை என தனது 18.02.2016 வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

> "IES is not aware of the DPR prepared for / by Tambaram Corporation. COC / CMA using Anna University logo. The applicant himself declares that the said DPR about 2000 page is a fake one".

மேற்கண்ட வாசகங்களைத் தொடர்ந்து கீழ்க்கண்ட வாசகங்களும் மேற்படி அண்ணா பல்கலைக் கழக பதிலில் இடம் பெற்றுள்ளன.

> "The then and present Directors of IES are not aware of this report. It is assured that no facility at IES was used for making this report. IES being an educational institute, is not capable of indentifying the source of this fake report".

நகராட்சி நிர்வாக ஆணையரது 02.09.2011 நாளிட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள விரிவான அறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இம்முறை மன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டது.

"In order to bring in uniformity and to make the scheme a viable one on techno economic front, as a first step had initiated the preparation of the document, viz., Detailed Project Report was done.

The Institute for Energy Studies, Anna University, Chennai was indentified as the Institution to prepare the DPR document and guidelines for O&M operations on an open tender system as per the TT Act. In this connection, a Technical Review Committee was formed with the following Members to approve the common, uniform DPR documents.

**Technical Review Committee Members:**

| | | |
|---|---|---|
| 1. Chief Engineer. O/o CMA | – | Chairman |
| 2. Chief Engineer (Buildings), PWD | – | Member |
| 3. Representative of TNUIFSL | – | Member |
| 4. Superintending Engineer. TNPCB | – | Member |
| 5. Director, DTCP (Rep) | – | Member |

The DPR addressed all facts of the Project that includes technology adoption, pollution controlling measures, economic viability, ease of operation, acceptance by the public and O&M aspects after conducting workshops and getting grievance of stake holders/users.

Five models were proposed based in the Mortality Rate & No.of Bodies cremated in a given time spon i.e., Type A,B,C,D & E as suggested by Institute of Energy Studies, Anna University,Chennai

| S.No | Type | Built up area (in Sq.m) | Cremation Rate (Minimum) |
|---|---|---|---|
| 1 | A | 575 | 10 Bodies / Per Day |
| 2 | B | 385 | 8 Bodies / Per Day |
| 3 | C | 245 | 5 Bodies / Per Day |
| 4 | D | 188 | 4 Bodies / Per Day |
| 5 | E | 158 | 4 Bodies / Per Day |

The Five model DPR documents were approved by the Committee and communicated to all the ULB's to select their suitability to execute.

Based on the common DPR documents circulated by the Commissionerate of Municipal Administration, ULB's prepared estimate according to their site suitability, schedule of rates at their respective ULB's and floated tenders. The agreement was executed by respective ULB's with the selected contractor as approved by the councils. In addition where ever additional facilities like meditation hall, tonsure hall, bathroom/ toilet facilities, parking facilities, were envisaged by the ULB's the same were included by the ULB's depending on site condition and need. Hence, only the model Detailed Project Reports were prepared and ULB's called for tenders, finalised and selected Contractors".

மேலும், தாம்பரம் நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோரால் 15.09.2013 அன்று அளித்துள்ள கீழ்கண்ட சான்றும் தொடர்புடைய கோப்பில் இடம் பெற்றுள்ளதும் கண்டறியப்பட்டுள்ளது. "Certified that M/sJwala Equipment and Consultant, Madurai has constructed and installed the Modern Gasfire crematorium at Dhangar Road (Thiruneer malai Road) in Tambaram Municipality as per the design "Type C" suggested by Anna University without any deviation."

மேலும், துறை அலுவலர்களிடமும் விசாரணையின் போது குறிப்புரை கோரப்படவும் இம்முறை மன்ற நடுவத்தால் முடிவு செய்யப்பட்டது

துறை அலுவலகங்களிலிருந்து மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதப் போக்குவரத்து விவரங்கள்.

1. 24.12.2009 திருமுருகன், ( ஜீவானா நிறுவனர்) என்பவரிடம் சென்னை பல்லாவரம் காவல் நிலையத்தில் பெறப்பட்ட வாக்குமூலம்
2. அண்ணா பல்கலைக் கழகம், சென்னை கடித எண்.132/PIO/AU-Chennai/13 நாள். 04.07.2013
3. க.எண்.821/பொ.த.அ/அ.ப சென்னை/2015 நாள்.12. 11. 2015
4. நகராட்சி நிர்வாக ஆணையர் ந.க.எண்.5311/2011/இ3 நாள்.31.03.2011
5. ந.க.எண்.5311/2011/அ.ந6 நாள்.22.03.2011
6. சென்னை மாநகராட்சி ந.க.எண்.பி4/1192/[illegible] நாள். 02.06.2011
7. நகராட்சி நிர்வாக ஆணையர் ந.க.எண்.5311/தி2/2011–2 நாள்.05.09.2014
8. அண்ணா பல்கலைக்கழகம் க.எண். 34/PIO/ AU-Chennai/ 2011 நாள்.08.03.2011
9. க.எண்.688/ PIO/AU-Chennai/2013 நாள். 21.01.2014
10. நகராட்சி நிர்வாக ஆணையர் ந.க.எண்.5311/11அந6 நாள் 27.07.2011
11. ந.க.எண். 5311/11 RTI–1 நாள்.04.02.2012

இவை மட்டுமின்றி சில பேரூராட்சிகள் நகராட்சிகளிலிருந்தும் மனுதாரர் கோரிய விவரங்களும் அளிக்கப்பட்டுள்ளன.

- மனுதாரருக்கும் புகார்தாரருக்கும் / நிறுவனத்துக்குமான தொடர்பு

மனுதாரர் தனது <u>29.01.2014</u> நாளிட்ட புனித தோமையார் மலை, காவல்துறை துணை ஆணையருக்கு முகவரியிட்ட கடிதத்தில் கீழ்கண்ட தகவல்களை குறிப்பிட்டுள்ளார்.

1. வனச்சரகராக பணியாற்றி 2008 –ஆம் ஆண்டு ஓய்வு பெற்றது.

2. 'God Trust' திருச்சி எனும் தொண்டு நிறுவன திட்ட அலுவலர் மூலமாக நாகப்பட்டிணத்தில் இயங்கி வரும் 'NARD TRUST' எனும் தொண்டு நிறுவன செயலாளர் திருமதி. பாக்கியலட்சுமி அறிமுகமானது.

3. அவர் தான் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் எனவும் பல்வேறு நகராட்சிகளில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணியை பெற்றுள்ளதாகவும் அதை வேறு தொண்டு நிறுவனங்களுக்கு Sub-Contract கொடுத்து God Trust–க்கு பல வேலைகளை செய்து கொடுத்துள்ளதாகவும் கூறியது. மேற்படி God Trust மூலமாக ஆலந்தூர், பல்லாவரம் , தாம்பரம் மற்றும் சிட்லபாக்கம் மற்றும் வேறு சில நகராட்சிகளிலும் தகன மேடை அமைக்கும் பணியை கட்டுமான பொறியாளரான மனுதாரரின் மகன் திரு.சுரேஷ் குமார் மற்றும் தன்னிடமும் திருமதி. பாக்கியலட்சுமி ஒப்படைத்தது.

4. பணி முடித்து பணம் கேட்கும்போது தனது மனைவி திருமதி. சுமதியின் பெயரில் ஜீவாலா எனும் நிறுவனத்தை நடத்தி வரும் திரு,G.திருமுருகனை அறிமுகம் செய்து அவர்தான் நகராட்சியின் உண்மையான ஒப்பந்ததாரர் அவர் பணம் கொடுப்பார் எனக் கூறியது. அதன்படி திரு.திருமுருகன் தனது மனைவியின் பெயரில் காசோலைகள் மனுதாரருக்கு வழங்கி வந்தது.

5. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் முடித்த பணிகளுக்காக மேற்குறிப்பிட்ட நகராட்சிப் பணிகள் தொகை ரூ.28லட்சம் திருமுருகனால் வழங்கப்படவில்லை.

மேற்படி விவரங்கள் மனுதாரருக்கும் புகார்தாரருக்கும் உள்ள தொடர்பு குறித்து மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் 2008–ல் அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்று அரசுத் துறையில் ஒப்பந்தம் பெற்றவரிடம் துணை ஒப்பந்தம் (Sub-Contract) பெற்று எந்த விதி / அனுமதியின் கீழ் பணி மேற்கொண்டார். அவர்களுக்கிடையேயான ஒப்பந்தங்கள் போன்ற

விவரங்களைத் தெரிவிக்கவில்லை. இவர் காவல்துறைக்கு முகவரியிட்ட கடிதத்தில் தாம்பரம், ஆலந்தூர், பல்லாவரம், சிட்லபாக்கம் ஆகிய இடங்களில் தான் பணி மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ளார். இவற்றில் தாம்பரம் நகராட்சி பணியில் அண்ணா பல்கலைக்கழகத்தின் முத்திரை (Logo) DPR–ல் முறைகேடாக உள்ளதென தெரிவிக்கப்பட்ட நிலையில் அப்பணியை மனுதாரர் எவ்வாறு எந்த விதி / அனுமதியின்படி ஏற்றுக் கொண்டார் என்பதற்கான விவரங்களும் குறிப்பிடப்படவில்லை. மேலும், இப்பணியின் தரம் குறித்தும் குறிப்பாக விவரங்கள் ஏதுமில்லை.

இந்நிலையில் 2008–2009 வரை மனுதாரர் கிட்டத்தட்ட ஓராண்டு காலம் அரசு ஒப்பந்ததாரரிடம் ஏதோவொரு வழியில் தொடர்பு வைத்திருந்தது புலனாகிறது. டிசம்பர் 2009–ல் மனுதாரருக்கும் , ஒப்பந்ததாரருக்கும் பணிக்கான பணப்பரிவர்த்தனையில் பிணக்கு ஏற்பட்டு 24.12.2009–ல் ஒப்பந்ததாரர் திரு.G.திருமுருகன் பல்லாவரம் காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு மனுதாரருக்கு தான் வழங்க வேண்டிய பாக்கித் தொகை குறித்து ஆவணங்களைச் சரிபார்த்து ஜனவரி முதல் வாரத்தில் கொடுத்து விடுகிறேன் என எழுதிக் கொடுத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மனுதாரர் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலகங்களுக்கும் புகார் மனுக்களையும் ஆவணங்கள் கோரி தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுக்களையும் அனுப்பி வைத்துள்ளார். இது குறித்து மனுதாரருக்கு ஒப்பந்ததாரரான ஜீவாலா நிறுவனம் தனது வழக்குரைஞர் மூலமாக "மனுதாரர் பணம் பறிக்கும் நோக்கத்தோடு செயல்படுவதாகவும், சிவில் வழக்கினை எதிர்கொள்ள தயாராக உள்ளதாகவும் மனுதாரர் தனது செயல்பாட்டினை நிறுத்திக் கொண்டு மன்னிப்பு கோராவிடில் மானநஷ்ட வழக்கும், குற்றவியல் வழக்கும் தொடரப்படுமென மனுதாரருக்கு அறிவிப்பு ஒன்று 06.12.2010–ல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து மனுதாரர் அளித்த பதில் விவரம் குறிப்பிடப்படவில்லை.

18) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் முடிவெடுத்து ஆணையிடப்பட்டவாறு 06.04.2016 மற்றும் 12.04.2016 ஆகிய நாட்களில் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் விசாரிக்கப்பட்டு அவர்களது வாக்குமூலங்களும் பரிசீலிக்கப்பட்டன. விவரம் பின்வருமாறு

(I)

| விசாரணை நாள் | | விசாரிக்கப்பட்ட நபர் / முகவரி<br><br>திரு.R.சீனிவாசன், மாநகராட்சி பொறியாளர், சென்னை பெருநகர மாநகராட்சி |
|---|---|---|
| 06.04.2016 | | வாக்குமூலத்தின் சாராம்சம் |
| | 1 | சென்னை மாநகராட்சியில் ஜீவாலா நிறுவனம் சார்பில் 6 இடங்களில் பணிகள் செய்யப்பட்டுள்ளன. |
| | 2 | அண்ணா பல்கலைக்கழக விரிவான திட்ட அறிக்கைகள் பெறப்பட்டு தகன மேடை அமைவிடத்திற்கு தகுந்தாற்போல் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. |
| | 3 | குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி கோரிய ஜீவாலா நிறுவனத்திற்கு 6 இடங்களில் பணிகள்ஒப்படைக்கப்பட்டன. |
| | 4 | பணி முடிந்த பின்பு அண்ணா பல்கலைகழக ஆய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு தரச்சான்றிதழும் பெறப்பட்டுள்ளது. |
| | 5 | அண்ணா பல்கலைக் கழகத்தின் சம்பந்தப்பட்ட துறைக்கு கட்டணம் வழங்கப்பட்டது. |
| | 6 | இந்த தகன மேடையின் தற்போது சென்னை பெருநகர மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. |
| | 7 | மனுதாரருக்கும் ஜீவாலா நிறுவனத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டது, மாநகராட்சிக்கும் மனுதாரருக்குமிடையே எவ்வித ஒப்பந்தமும் இல்லை. |

அண்ணா பல்கலைகழகத்திற்கு வழங்கப்பட்ட கட்டண விவரங்களுக்கு பட்டியல் நகல்கள் சமர்ப்பிக்கப்பட்டன. மேற்குறிப்பிட்ட 6 பணிகளும் 2010 மற்றும் 2011–ம் ஆண்டுகளில் முடிக்கப்பட்டுள்ளன. அண்ணா பல்கலைக்கழக எரிசக்தி கல்வி நிறுவனத்துறையினால்

08.05.2012 –ல் ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை / சான்று அளிக்கப்பட்டுள்ளது. ஆய்வு அறிக்கையின் முடிவில் "We opine that these systems can be straight away put into the operation for the cremation purpose and expect to work alright" என குறிப்பிடப்பட்டுள்ளது.

(II)

| விசாரணை நாள் | | விசாரிக்கப்பட்ட நபர் / முகவரி<br>திரு.வெ.ஜி.வெங்கட்ராஜ், கண்காணிப்பு பொறியாளர், பேரூராட்சிகளின் இயக்குநரகம் |
|---|---|---|
| 06.04.2016 | | வாக்குமூலத்தின் சாராம்சம் |
| | 1 | ஜீவாலா நிறுவனம் 5 பேரூராட்சிகளில் பணிகள் மேற்கொண்டது. |
| | 2 | மனுதாரருக்கும் துறைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. |
| | 3 | ஜீவாலா நிறுவனத்துடன் மனுதாரர் துணை ஒப்பந்தம் செய்து கொண்டதாக கூறுவது எவ்வித தகவலும்தெரிவிக்கப்படவில்லை. அவ்வாறு அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை. இருப்பினும் அது துறையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது. |
| | 4 | ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களில் குறைந்த தொகைக்கு கோரியவருக்கே பணி வழங்கப்பட்டுள்ளது. துணை ஒப்பந்தம் செய்ய ஒப்பந்த நிபந்தனைகளில் வழிவகை இல்லை. துணை ஒப்பந்தம் செய்திருந்தால் அது ஒப்பந்த விதிகளுக்கு எதிரானது. |

பணி முன்னேற்ற அறிக்கையில் மேற்படி பணிகளுக்கான மதிப்பீடுகள் துறைப் பொறியாளர்களால் தயார் செய்யப்பட்டுள்ளதெனவும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன எனவும் அண்ணா பல்கலைக்கழக முத்திரை ஏதும் பயன்படுத்தப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(III)

| விசாரணைநாள் | | விசாரிக்கப்பட்ட நபர் / முகவரி<br><br>__திரு. R. வெங்கடாசலம், தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்__ |
|---|---|---|
| 06.04.2016 | | __வாக்குமூலத்தின் சாராம்சம்__ |
| | 1 | மனுதாரருக்கும் ஜீவாலா நிறுவனத்திற்குமிடையே பிரச்சனை ஏற்பட்டுள்ளது. மனுதாரருக்கும் துறைக்கும் எவ்வித தொடர்புமில்லை. |
| | 2 | துணை ஒப்பந்த அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை. |
| | 3 | நகராட்சி நிர்வாக துறையின் கீழ் 62 இடங்களில் இப்பணிகள் துவக்கப்பட்டு பணி முன்னேற்ற அறிக்கைப்படி பணி நிலை உள்ளது. |
| | 4 | ஜீவாலா நிறுவனம் 32 இடங்களில் பணி மேற்கொண்டது. |
| | 5 | ஜீவாலா நிறுவன பணிகள் குறித்த தர அறிக்கை சம்பந்தப்பட்ட நகர, மாநகராட்சியிலிருந்து பெறப்பட்டது. |
| | 6 | அண்ணா பல்கலைக்கழக விரிவான திட்ட அறிக்கைகள் பெறப்பட்டது. கட்டணங்கள் வழங்கிய விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. |
| | 7 | தாம்பரம் நகராட்சியின் அண்ணா பல்கலைகழக முத்திரை விரிவான திட்ட அறிக்கையில் தவறாக பயன்படுத்தப்பட்டதாக கூறுவது சரியல்ல. |
| | 8 | விரிவான திட்ட அறிக்கையில் பொதுவான விஷயங்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கும். ஒவ்வொரு நகராட்சியும் பேரூராட்சியும் தேவைக்கேற்ப /திட்ட அறிக்கையின் அடிப்படையில் மதிப்பீடு தயாரித்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் ஒப்படைக்கப்பட்டன |

பணிகளின் நிலை குறித்தும் அண்ணா பல்கலைக் கழகத்திற்கு கட்டணம் வழங்கியதற்கான கட்டணப் பட்டியல்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட கட்டண விவரம் பின்வருமாறு.

| | Rupees | |
|---|---|---|
| 1. | 2,09,889 | receipt dated: 23.03.2007 |
| 2. | 2,62,361 | receipt dated: 02.05.2007 |
| 3. | 4,72,250 | receipt dated: 27.11.2007 |
| 4. | 1,05,057 | receipt dated: 09.11.2008 |
| | Total Rs 10,49,557/- | |

விவரங்கள் மனுதாரருக்கு 31.03.2011 நாளிட்ட கடிதம் மூலம் அளிக்கப்பட்டுள்ளது

(IV)

| விசாரணைநாள் | | விசாரிக்கப்பட்ட நபர் / முகவரி<br><br>திரு.வே.முருகேசன், நகராட்சி பொறியாளர், தாம்பரம் நகராட்சி |
|---|---|---|
| 12.04.2016 | | வாக்குமூலத்தின் சாராம்சம் |
| | 1 | அண்ணா பல்கலைக்கழக IES துறையின் விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில் பணி துவக்கப்பட்டது. |
| | 2 | ஜீவாலா நிறுவனம் பணி மேற்கொண்டு 15.08.2011–ல் பணிகள் முடிவுற்றது. |
| | 3 | பணி முடித்த பின்பு தரம் குறித்து ஆய்வு செய்திடவோ தரச்சான்று வழங்கவோ, மூன்றாவது நபர் நியமிப்பது குறித்தோ / பெறுவது குறித்தோ வழிவகை செய்யப்பட்டது. |
| | 4 | கட்டுமான பணிகளுக்கான பொருட்களின் தரம் ஆய்வுக் கூடத்தில் சோதனை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டது. |
| | 5 | சுற்றுச்சூழல் துறையின் ஒப்பந்தம் பெறப்பட்டுள்ளது. |
| | 6 | 5 ஆண்டுகளுக்கு மேல் பயன்பாட்டில் உள்ளது. |
| | 7 | துணை ஒப்பந்தத்திற்கு வழிவகை இல்லை. |
| | 8 | அண்ணா பல்கலைகழக IES முத்திரை தவறாக பயன்படுத்தப் பட்டதென்பது தவறானதாகும். |

(V)

| விசாரணைநாள் | | விசாரிக்கப்பட்ட நபர் / முகவரி<br><br>திரு. K . சிவக்குமார், நகராட்சி ஆணையர், பல்லாவரம் |
|---|---|---|
| 12.04.2016 | | வாக்குமூலத்தின் சாராம்சம் |
| | 1 | 2007–2008–ஆம் ஆண்டு பகுதி 2-ல் திட்டப்பணி வழங்கப்பட்டது. |
| | 2 | ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் ஜீவாலா நிறுவனத்திற்கு பணி ஒப்படைக்கப்பட்டது. |
| | 3 | 2011–ல் பணி முடிக்கப்பட்டது |
| | 4 | அண்ணா பல்கலைகழக 'லோகோ' (logo) ஏதும் தவறாக பயன்படுத்தப்படவில்லை. |
| | 5 | PCB அனுமதி பெறப்பட்டது. |
| | 6 | கட்டுமான பொருட்களுக்கான தரச்சான்றுகள் பெறப்பட்டுள்ளன. |
| | 7 | எவ்வித புகாருமின்றி இயங்கி வருகிறது. |

(VI)

| விசாரணைநாள் | | விசாரிக்கப்பட்ட நபர் / முகவரி<br><br>திரு.மகேசன், செயற்பொறியாளர், மண்டலம்–12 , சென்னை மாநகராட்சி |
|---|---|---|
| 12.04.2016 | | வாக்குமூலத்தின் சாராம்சம் |
| | 1 | ஆலந்தூர் நகர்மன்ற தீர்மான எண்.83 நாள் .30.05.2007–ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. |
| | 2 | ஜீவாலா நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. (04.06.2007) |
| | 3 | 02.02.2010–ல் பணி முடிவுற்றது. |
| | 4 | TNPCB அனுமதி பெறப்பட்டு எண்.22024/06.11.2009 |
| | 5 | பணி தரமான முறையில் உள்ளது. |
| | 6 | அண்ணா பல்கலைக்கழகம் வழங்கிய வடிவமைப்பு படி பணி இடத்திற்கேற்ப பணி மேற்கொள்ளப்பட்டது. |
| | 7 | Logo தவறாக பயன்படுத்தப்படவில்லை |
| | 8 | எந்தவித புகாருக்கும் இடமின்றி நல்லமுறையில் தகனமேடை இயங்கி வருகிறது |

(VII)

| விசாரணைநாள் | | விசாரிக்கப்பட்ட நபர் / முகவரி<br><br>திரு.அ.பொ.முனியாண்டி, செயல் அலுவலர், சிட்லபாக்கம் பேரூராட்சி |
|---|---|---|
| 12.04.2016 | | வாக்குமூலத்தின் சாராம்சம் |
| | 1 | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஜீவாலா நிறுவனம் மூலம் 2009–ம் ஆண்டு பணி முடிக்கப்பட்டது. |
| | 2 | அண்ணாபல்கலைக்கழக விரிவான திட்ட அறிக்கை பெறப்படாமல் பேரூராட்சிகளின் இயக்கக செயற் பொறியாளர் மூலமே திட்ட அறிக்கை / மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. |
| | 3 | தனி நிறுவனத்திடமிருந்து தரச் சான்று பெறப்பட்டுள்ளது. |
| | 4 | தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் தீயணைப்புத்துறை தடையின்மைச் சான்று பெறப்பட்டுள்ளது. |
| | 5 | ஜீவாலா நிறுவனத்துடன் மட்டுமே ஒப்பந்தம் போடப்பட்டது. |

மேலும் சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரது 12.04.2016 நாளிட்ட அறிக்கையில் 17.08.2009–ல் (பணிகள் முடிவடைந்த பின்) பராமரிப்புக்கு வழங்கப்பட்டதாகவும் தற்போது "Environment Health Education and Development Trust" மதுரை என்ற நிறுவனம் பராமரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2009–2010 உள்ளாட்சி நிதித் தணிக்கை தடைகள் ஏதுமில்லையெனவும் தகனமேடை நல்ல முறையில் நடைபெற்று வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழக முத்திரை ஏதும் பயன்படுத்தப்படவில்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், அண்ணா பல்கலைக் கழகத்தில் பணிக்கான கட்டண பட்டியல் நகல்கள், ஆவண நகல்கள் ஆகியவையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(19) பணிகளின் தரம், பொருட்களின் தரம் குறித்து விசாரணையின் போது சம்பந்தப்பட்ட அலுவலர்களால் அளிக்கப்பட்ட எழுத்துப்பூர்வமான வாக்குமூலங்கள் அண்ணா பல்கலைக்கழக சான்று, தரச் சான்றுகள் மற்றும் தொடர்புடைய நகராட்சிப் பொறியாளர் மற்றும் ஆணையாளர்களால் அளிக்கப்பட்டுள்ள சான்று ஆகியவற்றின் அடிப்படையிலும் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது ந.க.எண்.22/E 3 நாள் 02.09.2011-ன் படி அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அறிக்கையுடன் ஒப்பிட்டு பரிசீலிக்கும் பட்சத்தில் அலுவலர்களது வாக்குமூலங்கள் ஏற்புடையனவாக உள்ளன. மேலும், மனுதாரர் காவல் துறைக்கு வழங்கிய கடிதத்திலும் மாண்பமை சென்னைஉயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கொன்றின் உறுதி ஆவணத்திலும் தான் ஜீவாலா நிறுவனத்தின் துணை ஒப்பந்ததாரராக (Sub-Contractor) செயல்பட்டதாக உறுதிபட தெரிவித்துள்ளார்.

தமிழ் நாடு மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் மீதான விசாரணைக்காக முறைமன்ற நடுவர் அமைப்பை ஏற்படுத்திட 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மூலம் வகை செய்யப்பட்டுள்ளது. அச்சட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ள காரணங்களுக்காக மட்டுமே மேற்படி சட்டத்தின்கீழ் அரசினால் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (முறையீடுகள் தாக்கல் முறை, விசாரணை மற்றும் தீர்வு) விதிகள், 2015-ன்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள முறைகளின் படியும் உரிய படிவத்திலும் கட்டணத்துடனும் முறையீடுகள் தாக்கல் செய்யப்பட வேண்டும். ஆனால், சில நேர்வுகளில் மேற்குறிப்பிட்டவாறு விதிமுறைகளின் படி தாக்கல் செய்யப்படாமலும், தங்களது சுய விருப்பு வெறுப்பு நோக்கங்களுக்காகவும் அலுவலர்களை அல்லது தனக்கு வேண்டாதவரை மிரட்டுவதற்காகவும் இச்சட்டத்தின் கீழ் முறையீடு என செய்ய முனைவது இச்சட்டத்தின் தீர்வு வரம்பிற்குட்பட்டதாகாது என்பதோடு மேற்படி சட்டப்பிரிவு 8(2) ன் கீழ் அத்தகைய நிலை உறுதி செய்யப்பட்டு இம்முறை மன்ற நடுவம் சம்பந்தப்பட்டவருக்கு அபராதக் கட்டணம் நிர்ணயிக்க வேண்டிய நிலையும் எழுகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தார் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் ஒப்பந்ததாரராக இருந்துள்ளார். ஒப்பந்ததாரருக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மட்டுமே பணிகளில் ஒப்பந்தம் உள்ளது. ஆனால், ஒப்பந்ததாரர் செய்து கொண்ட துணை ஒப்பந்தங்கள் உள்ளாட்சி அமைப்புகளில் நேரடியாக எவ்வித சட்டப்பூர்வ தொடர்புகள் இல்லாத நிலை உள்ளது.

(20) எனவே, ஆவணங்கள், விசாரணைகள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையிலும் விதிகளின்படியும் மனுதாரரது முறையீடுகள் தீர்வுக்கு உகந்தவையல்ல என முடிவு செய்து அவ்வாறே இம்முறை மன்ற நடுவத்தால் ஆணையிடப்படுகிறது.

இருப்பினும், மனுதாரர் தனிப்பட்ட நபரிடம் தனக்குள்ள பணப்பரிவர்த்தனை நிகழ்வுகள் குறித்து தான் எதிர்நோக்கும் தீர்வுகளை சட்டப்படி காவல்துறை மூலமோ நீதிமன்றம் மூலமோ அல்லது சட்டபூர்வ பிற நடவடிக்கைகள்மூலமாகவோ பெறுவதற்கு தடை ஏதுமில்லை என இம்முறை மன்ற நடுவம் கருதி முடிவு செய்கிறது.

2016 ஆம் ஆண்டு மே திங்கள் 20 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்:

1. திரு,ச,தங்கராஜ், வனச்சரக அலுவலர் (ஒய்வு),
   2/311, C/o. கோமதி, இந்திரா நகர்,
   திரிசூலம், சென்னை – 600 043.

2. நகராட்சி நிாவாக ஆணையா்,
   நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
   எழிலகம், சேப்பாக்கம், சென்னை– 600 005.

3. சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையாளர்,
   சென்னை பெருநகர மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

4. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   குறளகம், சென்னை – 600 108.

5. பதிவாளர்,
   அண்ணா பல்கலைக்கழகம், சென்னை – 600 025.